S.No. 6073 | 16 LCST 2

(For candidates admitted from 2016-2017 onwards)

U.G. DEGREE EXAMINATION, NOVEMBER 2022.

Part IV — Tamil

சிறப்புத் தமிழ் - II

Time : Three hours | Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு சொற்களில் விடையளிக்க.

1. முதிரமலைத் தலைவனைக் குறிப்பிடுக.

2. மனவு கோப்பன்ன நன்னெடுங் கூந்தல் கொண்டவள் யார்?

3. சிறுபாணாற்றுப்படையைப் பாடியவர்?

4. ஔவைக்கு நெல்லிக்கனி அளித்த மன்னன்?

5. மயிர் நீப்பின் உயிர் வாழாத விலங்கு எது?

6. கல்லாது போகிய நாளும் - எனத் தொடங்கும் பாடல் உள்ள நூல்?

7. கவுந்தியடிகள் மாதரியிடம் யாரை அடைக்கலப்படுத்தினார்?

8. குகப்படலம் அமைந்துள்ள நூல் எது?

9. உலகப் பொதுமறை என்று அழைக்கப்படும் நூல்?

10. மணிமேகலையின் ஆசிரியர் யார்?

பகுதி ஆ — (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) 'வில்லோன் காலன கழலே' - எனத் தொடங்கும் பாடலின் கருத்து யாது?

(அல்லது)

(ஆ) கோவூர்க்கிழார் கூறும் புலவர்களின் பண்புகளை இயம்புக.

12. (அ) ஆமூர் வளத்தையும் உழத்தியரின் உபசரிப்பையும் கூறுக.

(அல்லது)

(ஆ) நல்லியக்கோடனின் முன்னிலையில் யாழ் வாசிக்கும் முறைமையை எடுத்துரைக்க.

13. (அ) மானம் உடையாரின் பண்புகள் யாவை?

(அல்லது)

(ஆ) பண்புடையாரிடத்தில் உண்டாகாத நாட்களாக நாலடியார் கூறுவனவற்றைப் புலப்படுத்துக.



14. (அ) அடைக்கலக் காதையில் கண்ணகியின் பெருமைகளைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) குகனின் சிறப்புகளை எடுத்துரைக்க.

15. (அ) எட்டுத் தொகையில் புறநூல்கள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) இரட்டைக் காப்பியங்கள் பற்றி இயம்புக.

பகுதி இ — (3 × 10 = 30)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் கட்டுரை வடிவில் விடை தருக.

16. குறுந்தொகை பாடல்களில் அகப்பொருட் சிறப்பை விவரி.

17. நல்லியக்கோடனின் ஈகைத்திறத்தை விளக்குக.

18. 'புறங்கூறாமை' - அதிகாரக் கருத்துக்களைத் தொகுத்தொழுதுக.

19. குகப்படலம் உணர்த்தும் செய்திகளை விரித்தெழுதுக.

20. தமிழில் அற இலக்கியங்கள் குறித்துக் கட்டுரைக்க.

---